# கொழும்பு பல்கலைக்கழகம், இலங்கை

## கலைப்பீடம்

### பத்திரிகைத் துறைக்கான டிப்ளோமா பயிற்சி நெறி – 2017

### DJ 03 – பத்திரிகையியல் துறையில் ஆக்க எழுத்து

### (Creative Writing in Media)

நேரம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

**எவையேனும் ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.**

---

01. பத்திரிகைகளில் ஆக்க எழுத்துக்களானது வாசகர்கள் மத்தியில் சிறந்த பொழுதுபோக்கினையும், கல்வி ரீதியான முன்னேற்றத்தினையும் மேம்படுத்தும். பரிசீலிக்குக.

02. பத்திரிகைக்கு பிரமுகர் ஒருவரை நேர்காணல் செய்யும் போது அவர் பற்றிய பின்னணி அறிவு மற்றும் ஆய்வின் முக்கியத்துவத்தினை விளக்குக.

03.

ஒன்றில்

**A)** ஆசிரியர் தலையங்கங்கள் எழுதுதலானது சமகால விவகாரங்கள் மற்றும் வாசகர்களின் தேவைகள் தொடர்பிலான விழிப்புணர்வின் அடிப்படையில் அமைதல் வேண்டும். விபரிக்குக.

அல்லது

**B)**

செய்திப்பத்திரிகையின் தூய்மை மற்றும் கௌரவத்தினை மறைமுகமாக (அநாமேதயமாக) காப்பாற்றுபவர் உப ஆசிரியரே ஆவார்" உப ஆசிரியரின் பணியினை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.

04. வாசகரின் அவதானம் குறைந்து செல்லாத வகையில் ஆக்க எழுத்தாளர் தனது எழுத்துக்களை முன்வைத்தலில் பெரிதும் கவனம் செலுத்துதல் வேண்டும். விபரிக்குக.

*(மறுபக்கம் பார்க்க)*

05. ஆக்க எழுத்துக்களின் பண்புகளைக் குறிப்பிட்டு அது எங்கனம் கல்வி ரீதியான அறிவு சார் (அறிவூட்டும்) எழுத்துக்களில் இருந்து வேறுபடுமாற்றினை ஒப்பீட்டு ரீதியில் ஆராய்க?

06. கீழ்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்றினை தெரிவு செய்து விவரண ஆக்கமொன்றினை எழுதுக?

I. இலங்கை அரசியலில் பெண்களின் பங்குபற்றல்

II. தேசிய அபிவிருத்தியில் தொடர்பாடலின் பங்களிப்பு

III. உங்களுக்கு விருப்பமான ஓர் இலக்கியவாதி

---

07. சமகால இலங்கைப் பத்திரிகைத் துறையில் காணப்படும் பத்தி எழுத்துக்களின் வகைகளை குறிப்பிட்டு அவற்றுள் ஏதாவது ஒன்றினை தெரிவு செய்து ஒப்பீட்டு ரீதியில் ஆராய்க?

08. "மிகவும் பிரதிபயன் மிக்க தொடர்பாடல் முறையாக காணப்படுவது வர்த்தக விளம்பரமாகும்" இலங்கையின் வர்த்தக விளம்பர துறையை ஆதாரமாகக் கொண்டு விளக்குக?

09. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கிற்கு சுருக்கக் குறிப்புக்கள் எழுதுக.

I. ஆசிரியருக்கான கடிதங்கள் (Letters to the Editor)

II. சினிமா விமர்சனம் (Film Criticism)

III. ஊடகங்களில் மொழிபெயர்ப்பு (Translation in Media)

IV. புகைப்பட இதழியல் ( Photo Journalism)

V. பேராசிரியர் கைலாசபதி

VI. பிரபல தொலைக்காட்சி நாடகம் (Popular Tele Drama)

VII. கார்ட்டூனின் முக்கியத்துவம் (Effectiveness of a cartoon)

VIII. பத்திரிகை அநுபந்தங்கள் (Newspaper Supplements)